# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 03.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 6293/SCIC/2023**

திரு. கரியபெருமாள் — மேல்முறையீட்டாளர்
எண். 8/204, சமுத்திரம் கஸ்பா
சமுத்திரம் கிராமம் மற்றும் அஞ்சல் - 636 306
எடப்பாடி வட்டம்
சேலம்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
சேலம் (மேற்கு).

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 12.12.2022 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 12.01.2023 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 06.02.2023 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 22.02.2023 |
| 5 | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 04.04.2023 |
| 6. | ஆணையத்தின் அறிவிப்பு | 26.07.2023 |
| 7. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 25.09.2024 & 09.11.204 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர் அலுவலகம் (நில நிர்வாகம்), மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சேலம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 4(b)-ன்படி தங்கள் அலுவலக அமைப்பு, அலுவலகப் பணியாளர்கள் பற்றிய விவரம் அவர்களின் செயல்பாடுகள் மற்றும் கடமைகள் குறித்த தகவல்கள் பொது மக்களுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் சலுகைகள், திட்டங்கள் இன்னபிற விவரங்கள், பொது மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில், தங்கள் அலுவலகத்தால் ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படுகின்றதா (அ) வெளியிடப்படுவதில்லையா என்ற தகவல்கள் தரவும்" என்பன போன்று 8 (எட்டு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

2. **இன்றைய (03/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.வே.செந்தில்குமார், மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்), சேலம் (மேற்கு) அவர்கள் ஆஜராகி மனுதாரருக்கு ஏற்கெனவே 12/01/2023, 22/02/2023, 25/09/2024 மற்றும் 09/11/2024 தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலர், இன்றைய விசாரணையின் போது, ஆவணங்களின் நகல்களைக் கொண்டு வந்திருந்தார், அதனை ஆணையம் உத்தரவிட்டவாறு மனுதாரரிடம் வழங்கினார். மனுதாரரும் அவ்வாவணங்களின் நகல்களைப் பெற்றுக் கொண்டு, அதன் நகல் ஒன்றில் மனுதாரர், "தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் விசாரணையின் போது உரிய தகவல்கள் நேரில் பெற்றுக் கொண்டேன்" என எழுதி கையொப்பமிட்டுள்ளார். எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

ஒம்./-(**முகம்மது ஷகீல் அ.்.தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 6293/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர்
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
சேலம் (மேற்கு).

**மேல்முறையீட்டாளர்**

திரு. கரியபெருமாள்
எண். 8/204, சமுத்திரம் கஸ்பா
சமுத்திரம் கிராமம் மற்றும் அஞ்சல் - 636 306
எடப்பாடி வட்டம்,சேலம்